# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **O.S.No.23/2020** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **பி.சா– (DW– 01 )** |
| **பெயர்** | **:-** | **செல்லம்மாள் க/பெ. லட்சுமணன்** |
| **தேதி** | **:-** | **02–06–2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

என் மாமனார் பெயர் வெங்கடாசலம். என் கணவருடன் பிறந்தவர்கள் பெருமாள், லட்சுமணன், ரங்கன், கிருஷ்ணன். என் மாமனார் வெங்கடாசலமும் என் கணவர் உட்பட அவருடைய மகன்களும் 1966-ஆம் ஆண்டே பதிவுசெய்யப்பட்ட ஆவணம் மூலம் சொத்துக்களை பாகப் பிரிவினை பிரித்துக் கொண்டனர் என்றால் சரிதான்.

வழக்குச் சொத்துக்களையும் வேறு சில சொத்துக்களையும் என் கணவரும் அவருடைய சகோதரர்களும் கூட்டாக கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான். 1969-ஆம் ஆண்டு வாங்கினார்கள் என்றால் சரிதான். கூட்டாக வாங்கப்பட்ட சொத்துக்களை அவர்கள் பாகம் பிரித்துக்-கொண்டார்கள் என்றும் மற்ற சகோதரர்களுக்கு ஒதுக்கிய சொத்துக்களை என் கணவர் 1972, 1980, 1982 ஆகிய ஆண்டுகளில் கிரயம் வாங்கிக்கொண்டார் என்றும் சொன்னால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்களை என் கணவரும் என் மகனும் 1995-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள்

என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நானும் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் இல்லை. என் மகள்களும் போடவில்லை. என் பெயரில் தனியாக சொத்து இருந்ததா என்றால் இருந்தது. அந்த சொத்தையும் பூர்வீக சொத்தையும் நானும் என் குடும்பத்தினரும் சேர்ந்து 04.09.1995-ஆம் தேதியன்று விற்றுவிட்டோம் என்றால் சரிதான். அந்த விற்பனை பத்திரத்தில் என் மகள்கள் கையொப்பம் இட்டுள்ளனர் என்றால் சரிதான்.

வழக்குச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் அது என் கணவரின் தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. என் சொத்துக்களையும் பூர்வீக சொத்துக்களையும் நாங்கள் விற்றுவிட்டு நான் என் மகள்களுடன் சென்றுவிட்டேன் என்றும் என் கணவர் தனியாக மகனுடன் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

என் மகன் தொழில் நோக்கத்திற்காகவும் குழந்தைகளின் படிப்பிற்காக -வும் வாழப்பாடியில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. சொத்தை என் மகன்தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

என் கணவர் 2017-ஆம் ஆண்டு என் பேத்திகள் பெயரில் அறுதியாவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் கணவர் 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறந்தார் என்றால் சரிதான். அவர் இறந்தபின் ஒரு மாதம் கழித்து வழக்கு தொடுத்தோம் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் லட்சுமணனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் வழக்குச் சொத்துக்களை பொறுத்து அவர் இறப்பதற்குமுன் ஏற்பாடு செய்து வைத்துவிட்டதால் வழக்குச் சொத்துக்களில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களில் பாகம்

கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.